புனித வாரம் “வேதனை” நமக்கு நினைவுறுத்துகிறது. வேதனையின் அர்த்தத்தின் ஆழத்தை ஆராய்வதை நாம் நிறுத்திக் கொண்டோமோ? வேதனையை நாம் எவ்வாறு கையாளுகிறோம்? யாரவது நமக்கு பரிவிரக்கம் காட்ட வேண்டுமென நாம் ஏங்கியிருக்கிறோமா அல்லது நமது வேதனையின் போது பரிவிரக்கத்தை அனுபவித்திருக்கிறோமா? நமது வேதனை நமது ஆன்மீகத்தை நிலைப்பெறச் செய்திருக்கிறதா அல்லது நிலைகுலையச் செய்திருக்கிறதா? எடுத்துக்காட்டாக, போராட்டத்திலும் சிரமத்திலும் பிணியிலும் பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதலாக இருப்பதற்கு, நமது நா கட்டுப்பாட்டைக் கற்றுக்கொண்டிருக்கிறதா? ஆம் என்றால், கடவுளுக்கு உகந்த பிள்ளைகளாக இருப்போம்.

கவிதை வடிவில் அமைந்திருக்கும் இன்றைய வாசகம், இரண்டாவது எசாயாவின் நான்கு ஊழியர் பாடல்களில் ஒன்று. இன்று குருத்து ஞாயிறு என்பதால், நீதிமான் வேதனை, பரிவிரக்கத்தையும் குறிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. கடவுளாக இருந்தாலும் தம்மையே வெறுமையாக்கி, கடவுளின் ஊழியனாக மரணம் மட்டும் கீழ்படிந்தார், இயேசு. தூய ஆவியானவர் அவரோடு இருந்ததால் இதனை அவரால் சாதிக்க முடிந்தது. தமது மகனின் பாடுகள் வழி மனுக்குலத்தை மீட்கும் தமது விருப்பத்ததை கடவுள் நிறைவேற்றினார். இக்கட்டான காலக்கட்டத்திலும் நிலை பிறழாது இரக்கத்தோடு இருக்க வேண்டுமென்று தமது சீடர்களுக்குக் கற்பிக்கிறார்.

கிறிஸ்துவ பாடுகள்/வேதனையின் பொருள் இன்றைய நற்செய்தியில் உச்சத்தை அடைகிறது. இயேசு உண்மையிலேயே நமக்கு யார் என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு, அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவை முக்கிய அம்சமாக அமைகிறது. பாடுகள் என்பது இயேசுவின் கொடூரமான வகையில் சிலுவையில் அறைவதோடு முடிகிறது. அது வெறுமையையும் வேதனையையும் கொடுத்தாலும், அதே பாடுகள் என்ற வார்த்தை மனுக்குலத்திற்கு பரிவிரக்கத்தை வழங்குவதாக அமைகிறது. நமது வாழ்க்கையில் அது ஒளியேற்றி, நம்பிக்கையை துளிரச் செய்யிருக்கிறது. கிறிஸ்துவின் உண்மை சீடர்கள் என்ற முறையில், ஒப்பில்லா இரக்கத்தால் நம் மீது அவர் அன்பு காட்டுகிறார் என்பதை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். அவ்வாறிருக்க இனிமேலும், நம்மால் பரிவிரக்கம் காட்டாமல் இருக்க முடியுமா? ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

25 மார்ச் 2018
குருத்து ஞாயிறு




# நம்மீது உள்ள அவரது பரிவிரக்கமே பாடுகளைத் தாங்கி கொண்டது

**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2018 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*
**கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்**

**மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**( 1848 – 2018 )**

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு சனி 24-03-2018 ஞாயிறு 01-04-2018**
எசா 50: 4-7 தி.பா 21: 8-9, 17-18a, 19-10, 23-24 பிலிப் 2: 6-11 மாற்கு 14: 1-15:47 (அ) 15:1-39
**என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? ( தி. பா 21 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 24 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பீடப் பணியாளர்) | |
| **குருத்து ஞாயிறு** | 25 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 ம | திருப்பலி (தமிழ்) (இளைஞர்கள்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (ம.கல்வி-ஆ படிவம் 2)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ)<br>மாலை 6.30 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது**<br><br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 26 | மாலை 8.00 மணி திருப்பலி ( சீனம், ஆங்கிலம்) திருப்பலியின் பின்னர் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும் | | |
| செவ் | 27 | மாலை 8.00 மணி திருப்பலி ( தமிழ், ஆங்கிலம்) திருப்பலியின் பின்னர் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும் | | |
| புதன் | 28 | மாலை 8.00 மணி திருப்பலி ( தே. மொ, ஆங்கிலம்) திருப்பலியின் பின்னர் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும் | | |
| வியா | 29 | **புனித வியாழன்** | *மா 6.00 : திருப்பலி (தமிழ், ஆங்கிலம்) / இரவு 8.00 : திருப்பலி (ஆங்கிலம், தேசிய மொழி, சீனம் )*<br>*நற்கருணை ஆசீர்வாதம் : நள்ளிரவு வரை - ஆலய மண்டபம் - உங்கள் ஒரு மணி நேரத்தை செலவிடுங்கள்* | |
| வெள் | 30 | **புனித வெள்ளி** | *காலை 10.00 : தமிழ் / மாலை 3.30 : சீனம், ஆங்கிலம் / இரவு 8.00 : தே.மொ, ஆங்கிலம்* | |

**பாஸ்கா ஞாயிறு - ஆண்டவரின் உயிர்ப்பு**
தி.ப 10: 34a, 37-43 தி.பா 117: 1-2, 16ab - 17, 22-23, 23-24 கொலோ 3: 1-4 யோவான் 20: 1-9
**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே, இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம் (தி. பா 117) )**

| | | | |
|---|---|---|---|
| **சனி**<br>**பாஸ்கா திருவிழிப்பு** | 31 | **பாஸ்கா திருவிழிப்பும் முதியோர் கிறிஸ்தவ புகுமுக வகுப்பினருக்கான திருமுழுக்கும்**<br>**5.00 மா :** பாஸ்கா திருவிழிப்பு / திருமுழுக்கு முகிபுவ (சீனம்)<br>**8.00 இரவு :** பாஸ்கா திருவிழிப்பு / திருமுழுக்கு முகிபுவ (தமிழ்)<br>**11.00 இரவு :** பாஸ்கா திருவிழிப்பு / திருமுழுக்கு முகிபுவ (ஆங்கிலம், தே.மொ) | |
| **உயிர்ப்பு ஞாயிறு** | 01 | 7.00 கா : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (தமிழ்)<br>9.00 கா : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (ஆங்கிலம்)<br>11.00 கா : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (சீனம்)<br>1.00 மதி : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (தே.மொ) | **குழந்தைகளுக்கான திருமுழுக்கு அனைத்து திருப்பலிகளிலும்** |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய இளைஞர் குழு மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**i) பங்கு காணிக்கை:**
**17/18 மார்ச் ரிம: 11,517.40**

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

**ii) பங்கு அலுவலகம் விடுமுறை:**
புனிதவெள்ளி, புனிதசனி, மற்றும் ஈஸ்டர் ஞாயிறு வரை மூடப்பட்டிருக்கும் மார்ச் 30,31 & ஏப்ரல் 1, 2018

**iv) காலை சிற்றுண்டி விற்பனை: 25-03-2018** அன்று தமிழ் அப்போஸ்தலப் பணிக்குழுவினர் விற்பனை செய்கின்றனர். உங்களுடைய ஆதரவைத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.அதிச/சோன்/பணிக்குழுவினர் ஆலய உணவு விடுதியில் காலை சிற்றுண்டி விற்பனை செய்ய முன்வருமாறு கேட்டுக் கொள்கிறோம். உங்களுக்கேற்ற நாளைத் தேர்ந்தெடுக்க திரு நாதனை தொடர்பு கொள்ளவும். நாதன்:012-684 0750

**v) 14 ஆம் பொதுத் தேர்தலுக்கு நாம் தயாராய் இருக்கிறோமோ?**
08-04-2018 - காலை 10.30 மணிக்கு மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும் விசேச கூட்டத்திற்கு வந்து செவிகொடுத்து, சிந்தித்து, தயாராகுங்கள்.

**vi) ஆலயத்தின் தோட்டப் பராமரிப்பு** மற்றும் பொது வேலைகளுக்காகப் புதிதாகப் பணியில் சேர்ந்திருக்கும் திரு. மோசஸ் ராஜேந்திரன் அவரை நாம் வரவேற்போம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.**
அஸ்டொன் பிலிப் பீட்டர் (இறப்பு: 19-03-2018)
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக

➢ **குருத்து ஞாயிறு உலக இளைஞர்களின் நாளாகவும் கொண்டாடப்படுகிறது.** நம்முடைய இளைஞர்களுக்காக செபிப்போம். இன்று இளைஞர் ஆண்டைத் தொடங்குகிறோம். இதன் விவரங்கள் அடங்கிய கையேட்டைப் பெற்றுக்கொள்ளவும். 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலக இளைஞர் தினம் பனாமா நாட்டில் கொண்டாடப் பட உள்ளது. இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள இளைஞர்கள் கிளென் மற்றும் அவர்தம் குழுவினரைச் சந்திக்கவும். அனைத்து இளைஞர்களுக்கும் " இளைஞர் தின நல் வாழ்த்துகள்"

➢ **வார இறுதியில் அனைத்து திருப்பலிகளுக்கு முன்னும் ஒப்புரவு அருளடையாளம்** வழங்கப்படும். திங்கள் - புதன் (26-28 மார்ச்) காலை 8.00 - 10.00 வரை இரவு 8.00 - 10.00 வரை வாருங்கள் வந்து ஆண்டவரோடு ஒப்புரவாகுவோம்.

➢ **புனித வெள்ளி - சிலுவைப் பாதை மற்றும் வழிபாடுகள்**
- பங்கு மக்கள் அனைவருக்காகவும் ஒரு மெழுகுத்திரியை ஏற்றி செபியுங்கள்.
- ஒவ்வொரு வழிபாட்டுக்குப் பின்னும் உங்களுடைய உண்ணா நோன்பை முடித்துக்கொள்ள பங்கில் ஏற்பாடு செய்யும் எளிய உணவில் கலந்து கொள்ளுங்கள். உணவு பகல் 3.00 மணி மற்றும் இரவு 8.00 மணிக்கும் உணவு வழங்கப்படும். இதற்காக உங்களிடமிருந்து நிதியுதவியை எதிர்பார்க்கிறோம்.

➢ **தவக்கால உறைகள்:** உங்களுடைய தவக்கால காணிக்கைகள்ள பங்கு அலுவலகத்தில் அல்லது திருப்பலி நேர உண்டியலில் போடலாம்.

➢ **சூப் கிச்சன்:** தவக்காலத்தில் என்னோடு ஒரு மணி நேரம் செலவழிக்க முடியுமா?
- ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் காலை 9.30 -11.30 வரை ஏழைகளோடும், வீடிழந்தோர், பசியுற்றோரோடு உங்களுடைய நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழியுங்கள்.

➢ **இத் தவக்காலத்தில் என்னால் என்ன செய்ய முடியும்?**
(lent.aohd.org) (www.facebook.com/Lenten campaign)
- 2018 ஆம் ஆண்டின் தவக்காலக் கருப்பொருள்: நமது பொது இல்லமான பூமியைப் பாதுகாப்போம். சுற்றுச் சூழல்மாற்றத்தின் பணியாளர்கள் நாம்.
- **நமக்கு அனைத்தையும் கொடுத்த கடவுளுக்கு நான் எதைத் திருப்பிக் கொடுக்கமுடியும்?**
நமக்குப் பரிசாகக் கொடுத்த நமது இல்லமான பூமியை நான் பாதுகாக்க என்ன செய்ய முடியும்?
- **வெளிப்புற நடவடிக்கையாக நான் செய்ய விரும்புவது என்ன? அ)...... ஆ)..... இ).....**
- **நம்முடைய பொது இல்லமான பூமியைச் சீர்ப்படுத்த என்ன செய்யமுடியும்? அ)...ஆ).... இ)...**

➢ **ஈஸ்டர் திருவிழிப்புக் கொண்டாட்டத்தில்** அறிமுக அருளாயாளங்களைப் பெற்று நம் கத்தோலிக்க திருச்சபையில் இணையும் 28 வேட்பாளர்களையும் நம் அனைவரின் செபங்களிலும் ஒப்புக்கொடுப்போம்.

➢ **எஸ்.பி.எம் முடித்த மாணவர்களுக்கு** : முழு உபகார நிதியுடன் அசுந்தா மருத்துவமனையில் தாதியர் பயிற்சி பயில வாய்ப்பு: தொடர்புக்கு: 03-7872 3078 அல்லது email: haspuniza@assunta.com.my

➢ **விசேச உறுதிப்பூசுதல் வகுப்புகள் 2018 - (ஆங்கிலம் & தேமொழி)** உரிய வயதில் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை பெறத் தவறியவர்களுக்கான விசேச வகுப்புகள் ஏப்ரல் 15, 2018 அன்று தொடங்கவிருக்கின்றன. உங்களுடைய பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளுங்கள்.

➢ **சோய்ஸ் தமிழ்** : 6–8 ஏப்பிரல் 2018 APC கோலாலும்பூர், கட்டணம் ரி.ம 130,
தொடர்புக்கு : ரெய்மன்ட் பன்னீர்செல்வம் 016 689 4257